வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – ரோஷ்னா காசிம்

தேதி 15.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- நாட்டில், பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தெரிவித்துள்ளார்.
- 4ஆவது தேசிய தலைமை செயலாளர்கள் மாநாட்டின் நிறைவு விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்றுகிறார்.
- ஆயுதங்களை கைவிட்டு, சமூகத்தின் முக்கிய நிகழ்வுகளில் பங்கெடுக்குமாறு மாவோயிஸ்டுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.
- இந்திய அரசியலமைப்பு சாசனம் ஏற்பின் 75ஆம் ஆண்டு விழா மற்றும் சட்ட நாள் விழா புதுச்சேரியில் நேற்று நடைபெற்றது.

-----------------------------

<u>*அரசியல் சாசனம்* 1 (19)</u>

நாட்டில், பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தெரிவித்துள்ளார். மக்களவையில் நடைபெற்ற இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் 75 ஆண்டுகால பயணம் குறித்த சிறப்பு விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய அவர், இதற்கென நீண்ட விவாதம் நடத்தப்பட்டுள்ளதாகவும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, இச்சட்டத்தை கொண்டு வருவதற்கான பணிகளில் ஈடுபடுவதாகவும் கூறினார். நமது நாட்டின் ஜனநாயகம், உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். பெண்கள் தலைமையிலா வளர்ச்சியில், மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். காங்கிரஸ் ஆட்சி

காலத்தில் அரசியல் அமைப்பு சட்டம் 75 முறை திருத்தி அமைக்கப்பட்டதாக அவர் கூறினார். மதத்தின் அடிப்படையிலான இடஒதுக்கீடு என்பது, அரசியல் சாசன சட்டத்தின் உணர்வுகளுக்கு எதிரானது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார். நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்வை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு, சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுவதாக அவர் கூறினார். அண்டை நாடுகளில் உள்ள சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கும் வகையில் குடியுரிமை சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார். 25 கோடி ஏழை மக்களை வறுமையின் பிடியில் இருந்து வெளிகொண்டு

_அரசியல் சாசனம்_ 2 (10)

வருவதற்கான நடவடிக்கைகளுக்கு தமது தலைமையிலான அரசு முன்னுரிமை வழங்கி வருவதாக பிரதமர் குறிப்பிட்டார். புதிய இந்தியாவை கட்டமைக்கும் நோக்கில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் ஊழலை முற்றிலும் அகற்றுவது உள்ளிட்ட 11 தீர்மானங்களை பிரதமர் முன்மொழிந்தார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75 ஆண்டுகால பயணம் குறித்த இந்த விவாதத்தில், பிஜேபி, காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, சிவசேனா, ஐக்கிய ஜனதளம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். இந்த விவாதம் மாநிலங்களவையில் நாளை தொடங்கி 2 நாட்களுக்கு நடைபெற உள்ளது.

-----------------------------

_மோடி_ (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் 4ஆவது தேசிய தலைமை செயலாளர்கள் மாநாடு, புதுடெல்லியில் கடந்த வெள்ளிக் கிழமை தொடங்கியது. இறுதி நாளான இன்று, மாநாட்டின் நிறைவு கூட்டத்தில பிரதமர் உரையாற்றகிறார். மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான கூட்டாண்மையை வலுப்படுத்துவதை

நோக்கமாக கொண்டு இம்மாநாடு நடைபெறுகிறது. கூட்டுறவு கூட்டாச்சியை மேம்படுத்துதல் மற்றும் விரைவான வளர்ச்சியை அடைய, சிறந்த ஒருங்கிணைப்பை உறுதி செய்வதில் கவனம் செலுத்தப்படுகிறது. இம்மாநாட்டில், தலைமை செயலாளர்கள், அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் மூத்த அதிகாரிகள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

-----------------------------

<u>*அமித் ஷா*</u> <u>(15)</u>

ஒரே நாடு-ஒரே தேர்தல் நடைமுறை, கூட்டாச்சி தத்துவத்திற்கு எதிரானது என கூறப்படும் குற்றச்சாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, திட்டவட்டமாக மறுத்தார். புதுடெல்லியில், தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். மக்களவைக்கும், மாநிலங்களின் சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறுவது என்பது புதிதல்ல என்றும், அவர் தெளிவுபடுத்தினார். ஒரே நாடு- ஒரே தேர்தல் முறைப்படி 3 முறை தேர்தல்கள் நடைபெற்றுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். இந்த ஒரே நாடு-ஒரே தேர்தல் நடைமுறை, அதிபர் தேர்தல் போன்ற அணுகுமுறை என்றும், இதன்மூலம், பிஜேபி பயனடையும் என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்தார். 2014 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் ஒடிசாவில் மக்களவை மற்றும் சட்டப் பேரவைத் தேர்தல் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டதை சுட்டிக் காட்டிய திரு. அமித் ஷா, அதில் பிஜேபிக்கு வெற்றி கிடைக்கவில்லை என்றும் கூறினார்.

-----------------------------

__வண்ண விருது__ (16)

ஆயுதங்களை கைவிட்டு, சமூகத்தின் முக்கிய நிகழ்வுகளில் பங்கெடுக்குமாறு மாவோயிஸ்டுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று வேண்டுகோள் விடுத்துள்ளார். ராய்ப்பூரில், சத்தீஸ்கர் காவல் துறைக்கு குடியரசுத் தலைவரின் வண்ண விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய உள்துறை அமைச்சர், சத்தீஸ்கர் காவல் துறை, நக்சல் எதிர்ப்புப் பிரச்சாரத்தை முழு துணிச்சலுடனும், அர்ப்பணிப்புடனும் செயல்படுத்த, மத்திய அரசின் தீர்மானத்தை நிறைவேற்றி வருகிறது. சத்தீஸ்கர் அரசு, மிகச் சிறந்த கொள்கையை கொண்டுள்ளதாகவும், சரணடைந்த மாவோயிஸ்டுகளுக்கு நல்ல நெறிமுறைகளை தொகுத்து வழங்குவதாகவும் அவர் கூறினார். சத்தீஸ்கர் காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ள குடியரசுத் தலைவரின் இவ்விருதானது, அவர்களின் சேவை, மற்றும், தியாகத்தின் சின்னம் என்று அவர் கூறினார். இவ்விழாவில், காவல் துறையின் பல்வேறு அணிவகுப்பு நிகழ்ச்சிகளை பார்வையிட்ட திரு. அமித் ஷா, தொடர்ந்து இன்று மாலை பஸ்தார் பிரதேச ஜெக்தல்பூரியில் நடைபெறும் பஸ்தார் ஒலிம்பிக்கின் நிறைவு விழாவில் கலந்து கொள்கிறார்.

-----------------------------

***__சட்ட நாள் (9)__***

இந்திய அரசியலமைப்பு சாசனம் ஏற்பின் 75ஆம் ஆண்டு விழா மற்றும் சட்ட நாள் விழா புதுச்சேரியில் நேற்று நடைபெற்றது. புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, உச்ச நீதிமன்ற நீதியரசர் மகாதேவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாற்றினர். இதுதொடர்பாக அவர்கள் பேசுகையில்,

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் திரு. சுப்ரமணியன், திரு. விஜயகுமார், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை மற்றும் சட்ட அமைச்சர் திரு.லட்சுமி நாராயணன், சட்டத்

துறை செயலர் திரு. எல்.எஸ் சத்தியமூர்த்தி ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

-----------------------------

<u>பட்டேல் (11)</u>

இந்தியாவின் இரும்பு மனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. இந்நாளையொட்டி, பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில்,

நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்காக சர்தார் வல்லபாய் பட்டேல் ஆற்றிய பணிகள் இன்றளவும் அனைவருக்கும் உந்துசக்தியாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குகளை எட்ட, இது உத்வேகம் அளிப்பதாகவும், திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், நவீன இந்தியாவிற்கான அடிதளத்தை விதைத்தவர் சர்தார் வல்லபாய் பட்டேல் என்று குறிப்பிட்டுள்ளார்.

-----------------------------

<u>*மன் கீ பாத்* (8)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் தனது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சியின் 117ஆவது அத்தியாயம் வரும் 29ஆம் தேதி ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். மக்களின் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை 1800 11 7800 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொண்டு பங்கேற்கலாம். இம்மாதம் 27ஆம் தேதி வரை தங்களின் கருத்துக்களை நமோ செயலி அல்லது மை கவ் ஓபன் ஃபாரம் மூலம் பகிரலாம்.

-----------------------------

ஜெய்சங்கர் (8)

மோல்டோவா நாட்டின் துணை பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான திரு. மிஹெய்ல் பாப்சாய், 3 நாள் அரசுமுறை பயணமாக இன்று இந்தியா வருகிறார். அவரது இந்த பயணத்தின்போது, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளதாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம், கலாச்சார பரிமாற்றம், மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர் ஆலோசனை நடத்துகிறார்.

-----------------------------

இலங்கை அதிபர் (11)

இலங்கை அதிபர் திரு. அனுர குமார திச நாயக்கே, 3 நாள் பயணமாக இன்று புதுடெல்லி வருகிறார். அந்நாட்டு அதிபராக பொறுப்பேற்ற பின் அவர் முதல் முறையாக இந்தியா வருகிறார். இந்த பயணத்தின் போது, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். பின்னர், புதுடெல்லியில் நடைபெறும் வர்த்தகக் கூட்டம் ஒன்றில் பங்கேற்கும் அவர், இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், முதலீடுகளை ஈர்ப்பது குறித்தும், வர்த்தக நிறுவன பிரதிநிதிகளுடன் விவாதிக்க உள்ளார். மேலும், இந்தியா-இலங்கை இடையேயான கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ள புத்த கயாவிற்கும் திரு. அனுர குமார திச நாயக்கே செல்ல உள்ளார்.

-----------------------------

வானிலை (10)

தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், அடுத்த 24 மணி நேரத்தில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து, இது வலுப்பெற்று, மேற்கு மற்றும் வடமேற்கு திசையில் தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி இரு தினங்களில் நகரக்கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனால், இன்று முதல், வரும் 19ஆம் தேதி வரை, தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால்பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------